# இந்துக்களின்
# விரதங்களும் விழாக்களும்

அருளியது :

**ஸ்ரீ சுவாமி சிவானந்தா**

தமிழாக்கம் :

'அத்யாத்ம ரத்ன' திரு. S. G. இராமலிங்கம், B. A.
ஞானகுரு ஆசிரியர், மதுரை.

வெளியிடுவோர் :

**தெய்வீக வாழ்க்கைச் சங்கம்**
சிவானந்தா யோகாசன சாலை
இராசிபுரம் :: சேலம் ஜில்லா.
1971 ஆம் ஆண்டு மே மாத வெளியீடு

## ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் எட்டாவது அவதார தினம் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி. பரமாத்மா பத்ர மாதம் (ஆகஸ்ட் — செப்டம்பர்) கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி திதியில் அவதரித்தார். ஹிந்துக்களுள் அது மகா விசேஷம் வாய்ந்த புண்ணிய நாள். நள்ளிரவில் பகவான் அவதரித்தார். எனவே, நள்ளிரவிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட விரதம் 24 மணி நேரத்திற்குப்பின் நள்ளிரவிலேயே முடிக்கப்பட வேண்டும். கோவில்கள் அலங்கரிக்கப்படும். பஜனைகள் நடைபெறும். மணியோசை கேட்கும். சங்கு ஊதுவார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் புகழ்ந்து ஸ்தோத்திரங்கள் சொல்லப்படும். மத்ராவில் (Muttra) ஸ்ரீ கிருஷ்ண பிரான் ஜனனமானார். இந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் யாத்ரீகர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வந்து தங்கி பக்தி கொண்டாடுவார்கள். பிரத்தியேகமான மேலாக்கள் (ஹிந்துமத பக்திசபைகள்) நடைபெறும். பல கோடி பக்தர்கள் இவைகளில் கலந்து கொள்வார்கள்.

மகாபாரதம், பாகவதம் இவைகளை ஆதாரமாக வைத்து ஆராய்ந்தால், (1945 கி. பி. க்கு) 5172 வருஷங்களுக்கு முன் அதாவது கி. மு. 3227-ஆவது ஆண்டில் விஸ்வாவசு ஹு ஆவணி மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி திதியும் ரோகணி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் புதன்கிழமையன்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் ரிஷப லக்கினத்தில் அவதரித்தார். லக்கினத்தில் சந்திரன், கேது; — சிம்மத்தில்

RangaRakes tamilnavarasam.com

சூரியன்; — கன்னியில் புதன்; — துலாத்தில் சுக்கிரன், சனி; — விருச்சிகத்தில் ராகு; — கும்பத்தில் செவ்வாய்; — மீனத்தில் குரு; — பகவான் அவதரிக்கும் போது அமைந்த ராசிச்சக்கரம் இதுவே.

பாகவதத்தைப் படித்தால், ஸ்ரீ கிருஷ்ண பகவானின் மஹிமைகளையும், அவருடைய அமானுஷ்யமான செயல்களின் வரலாறுகளையும் நன்கு அறியலாம். துஷ்டர்களை நிக்ரஹம் செய்தல், சிஷ்டர்களைப் பரிபாலனம் பண்ணி இந்தியாவில் பக்தி மார்க்கத்தைப் பரப்புதல், குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் பிரதான பங்கு வகித்து, கீதை உபதேசம் புரிதல் ஆகிய இம் மூன்றுமே ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்திற்கு முக்கிய காரணங்கள்.

ஸ்ரீ கிருஷ்ண பக்தியைக் காட்டிலும் உண்மையான ஸாஸ்திரம் வேறு கிடையாது. ராதா, கிருஷ்ணன் இவர்களை பக்தியோடு பாராட்டுகிறவன் உண்மையில் செல்வம் நிறைந்தவன். ஸ்ரீ கிருஷ்ண பக்தர்களுடன் பேரிணக்கம் வைத்துக்கொள்வதைத் தவிர்த்து, வேறு சன்மார்க்கம் கிடையாது. ஸ்ரீ பகவானின் நாமம் அல்லது பரந்த குணவிசேஷங்கள், லீலைகள் இவைகளை நாம் ஞாபகத்தில் சதா வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆனந்தக் கடலே ஸ்ரீ கிருஷ்ண பகவான்! ஆத்மாவைக் கவர்ச்சி பண்ணும் அவரது லீலைகளே ஆச்சரியங்களுக்கெல்லாம் ஆச்சரியம் — அவைகள் அக்கடலுக்கு அலைகளாக விளங்குகின்றன. தேன் பொழியும் அவரது குழலோசை மூன்றுலகங்களிலுள்ளோரை ஆனந்தத்தில் மூழ்குவிக்கும். நிகரற்ற அபாரமான அவரது அழகு எல்லா உயிர்களையும் ஆச்சரியப்படுத்துகின்றது. பக்தர்களையெல்லாம் அவர் ஒப்பிட்டுக்



கூற முடியாத தமது பிரேமையினால் அலங்கரிக்கின்றார்.

ஸ்ரீ கிருஷ்ண பகவானின் வலது பாதத்தில் கொடி, தாமரை, இரும்புச்சலாகை, ஸ்வஸ்திகா ஆகியவற்றின் உருவங்களும், இடது பாதத்தில் வானவில், தண்ணீர்க் குடம், பிறைச் சந்திரன், மீன், பசுவின் பாதப்பதிவு ஆகியவற்றின் உருவங்களும் காணப்படுகின்றன. பிரபஞ்சத்தின் பேருணர்வும் ஆனந்தமும் சுருங்கி அமைந்த வடிவமே அவருடைய வடிவம். அவரது தேகம் கணக்கிட முடியாத பிரஹ்மானந்தங்களை வியாபித்துக் கொண்டிருக்கிறது.

ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பெறுவதற்குப் பக்தி ஒன்றுதான் சிறந்த சாதனம். பக்தி ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் வைக்கும் பிரேமையைக் கிளறிவிடும். பிரேமையை ஸ்ரீ கிருஷ்ணன் பால் திருப்பியவுடன், மனிதன் லோகப் பந்தத்தினின்று விடுபடுகிறான். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, ஸ்ரீ ராதா ஆகியோரின் நல்லாசிகள் எல்லோருக்கும் உண்டாவதாக!

## வரலக்ஷ்மி விரதம்

இதற்கு வர-மகாலக்ஷ்மி விரதம் என்றும் ஓர் பெயர் உண்டு. பெண்களிடையில் பிரசித்திபெற்ற விரதம் ஸ்கந்த புராணத்திலே, சிவபெருமான் இவ் விரதத்தின் மகிமையைப் பற்றிப் பார்வதியிடம் விவரித்துள்ளார் என்றும் படிக்கிறோம். கணவனோடு கூடி வாழும் ஓர் பெண்மணிக்குச் சௌபாக்கியவதி என்று பெயர். வரலக்ஷ்மி விரதத்தைச் சௌபாக்கியவதி

RangaRakes tamilnavarasam.com

களை முக்கியமாக அனுஷ்டிக்கவேண்டும். சர்வ மங்களகரமும் சுபிட்சமும் நிறைந்த களஞ்சியமாக மகாலக்ஷ்மி தேவி விளங்குகிறாள். ஸத் ஸந்தானப் பிராப்திக்காகவும் தீர்க்க சௌமங்கல்யத்திற்காகவும் இவ் வரலக்ஷ்மி தேவி பூஜை தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

ஶ்ரவண மாதப் பௌர்ணமி திதிக்கு முந்திய வெள்ளிக்கிழமையே வரலக்ஷ்மி விரத நாள் ஆகும். புனித நீராடித் தூய உடை அணிந்து, ஏற்கனவே சாணமிட்டு மெழுகின அறையில் இப்பூஜை செய்யுமிடத்தில் தாமரை மலர்போலக் கோலமிடவேண்டும். அங்கே ஓர் கலசம் அமைக்கவேண்டும். கலசத்திலே அரிசி ததும்ப, கலசத்தின் மேலே புதிய மாவிலைகளும் தேங்காயும் துணியும் வைக்கவேண்டும். அப்பால் லக்ஷ்மி தேவியை அங்கே ஆவிர்ப்பவிக்கும்படி பிரார்த்தனை பண்ணவேண்டும். புதிய தானியங்களையே உபயோகிக்க வேண்டும். வளர்ச்சி, சுபிட்சம், மங்களம் ஆகிய அம்சங்கள் உணர்த்துமென்ற கோட்பாடு! கலச பூஜைக்குப்பின் கணேச பூஜை செய்தல் வேண்டும். பின் திவ்ய நூல் அதாவது ரக்ஷையைப் பூஜிப்பது. பிரதான பூஜைதான் வரலக்ஷ்மி பூஜை—சாஸ்திரோக்தமாய் இப் பூஜையைச் செய்தான பிறகு, ரக்ஷையை மீண்டும் வணங்கவும். விரதமனுஷ்டிக்கும் பெண்மணியின் வலது கையில் இந்த ரக்ஷை கட்டவும். தக்க மந்திர உச்சாடனத்துடன இறுதியில் அர்க்கியம் வழங்குதல்வேண்டும். பொருத்தமான சுமங்கலி ஒருத்திக்குப் போஜனம் அளித்து மங்களகரமான பொருள்களைத் தானமாக வழங்கவும்.

இந்த விரதத்தை அனுஷ்டிக்கத் தொடங்குவதற்குக் குறிப்பிட்ட காலம் எதுவும் கிடையாது.



தென்னிந்தியப் பெண்மணிகள் பெரும்பாலும் வருடா வருடம் இவ்விரதத்தைக் கொண்டாடுகிறார்கள். அன்று அவர்கள் வீட்டில் மகிழ்ச்சியும் விருந்து குதூகலமும் தாண்டவமாடும். மிகுந்த சிரத்தையோடும் உற்சாகத்தோடும் இப்பூஜையைச் செய்வார்கள். இது நடைபெறும் வீட்டிலே மகாலக்ஷ்மி புன்முறுவல் செய்கிறாள் அக்குடும்பத்தாரைப் பார்த்து. அவள் தனது திருவருளைப் பொழிந்து அந்த வீட்டில் சர்வ மங்களமும் சுபிட்சமும் ஆனந்தமும் விவேகமும் தங்கித் ததும்புமாறு ஆசீர்வதிக்கிறாள். இந்த வரமகாலக்ஷ்மி விரதத்தின் குறுகிய வர்ணனையை வாசித்த நேயர்களின் வீடுகளிலே சந்தோஷத்திற்கும் சுபிட்சத்திற்கும் அதிதேவதையான மகாலக்ஷ்மி சதாகாலமும் வாசம் புரிவாளாக. — ஓம் தத் ஸத் —

## ஸாவித்ரீ விரதம்

ஆனி மாதம் சுக்கில பக்ஷ பௌர்ணமியன்று ஸாவித்ரீ விரதம் அனுஷ்டிக்க வேண்டும் பிரஹ்ம பத்தினியாகிய ஸாவித்ரீ தேவியைக் குறித்துச் செய்யும் விரதம். இந்த விரதம் அனுஷ்டிக்கும் பெண்மணிகள் விசேஷ மாங்கல்ய விருத்தியும் புத்ர பௌத்ர ஸம்பத்தும் உண்டாகி நீடூழிகாலம் சுகமாய் வாழ்ந்திருப்பார்கள்.

அஸ்வபதி மகாராஜா ஜிதேந்திரியர்—குணசாலி—பிரம்மபத்தினியாகிய ஸாவித்ரீ தேவியைக் குறித்து, விரதமனுஷ்டித்து ஹோமம் செய்து வந்தார். ஸாவித்ரீ தேவி ப்ரஸன்னமாகி, "ராஜா! மிக்க சந்தோஷம்.

RangaRakes

tamilnavarasam.com

அழகான பெண் பிறப்பாள்" என்று திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தானமானார்.

அஸ்வபதி ராஜாவுக்குப் பெண் பிள்ளை ஒன்று பிறக்கவே ஸாவித்ரீ என்றே நாமமிட்டார்கள். யௌவனப் பருவமடைந்த ஸாவித்ரீ அநேக வரர்களைத் தானே தேடிப்பார்த்து, இறுதியில் ஸத்யவான் எனும் அரசிளங் குமரனை மணந்துகொள்ளுவதாக வாக்குறுதி செய்து விட்டுத் திரும்பினாள். அப்போது நாரத மாமுனிவர் அவள் முன்னால் தோன்றினார். ஸாவித்ரீ அவரை ராஜ மரியாதைகளுடன் வரவேற்றாள். நாரத மாமுனிவர் "ஸாவித்ரீ! மிக்க சந்தோஷம். உன் சொந்த விஷயத்தில் ஓர் கவனிப்பு. யாரை மணந்து கொள்வதாக நிச்சயித்தாயோ அவ்வாலிபனுக்கு ஆயுள் குறைவு. இதற்கு நீ என்ன செய்வாய்? வேறொரு வரனை தேர்ந்தெடுக்கலாமே" என்று கூறினார். இதைக் கேட்ட ஸாவித்ரிதேவி பதைபதைப்புடன் "நாரத மாமுனிவரே! மனத்தில் நிச்சயித்த அந்த வரனைத் தவிர வேறொருவனைக் கண்ணால் ஏறிட்டும் பார்க்க மாட்டேன். வரனுடைய ஆயுள் பாவம் குறைந்தால்தான் என்ன!" என்று நியாய விரோதமின்றித் தர்க்கித்தாள்.

பின் நல்லதோர் சுப முகூர்த்தத்தின்போது ஸாவித்ரிதேவிக்கு விவாகம் நிகழ்ந்தது. சில நாள் ஸாவித்ரி தன் கணவனுடன் இனிது வாழ்ந்து வரலானாள். விதியின்படி மணமகனுக்கு ஆயுள் முடிவுற்றது. எமதர்ம ராஜா தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு வந்தார். அன்றைய தினம் ஆனிமாதம் பௌர்ணமி நாள் ஆனதால், ஸாவித்ரி விரதத்தை அனுஷ்டித்தாள் மணமகள். விதிப்படி நியமம் பிசகாமல் ஸாவித்ரீ தேவியின் விரதத்தை அனுஷ்டிக்கிறதைக் கண்ட யம



தர்ம ராஜாவுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவர், "பெண்மணியே! நீ அனுஷ்டிக்கும் ஸாவித்ரீ விரதத்தின் பலனை, உன் பர்த்தாவுக்கு ஆயுள் தீர்ந்து போனாலும் உனக்கு நான் தீர்க்க மாங்கலிய வரத்தைத் தந்தேன். இன்னும் வெகுகாலம் இன்புற்று வாழ்வீர்களாக" என்று மனமகிழ்ந்து ஆசீர்வதித்தார்.

இக்கதை இதிகாஸத்திலுள்ளது. இக்கதையினால் நமக்குக் கிடைக்கிற நீதி என்ன? முக்கியமாக மாங்கலிய பலத்தைக் கொடுக்கிற விரதம் சாவித்ரீ விரதமே. மாங்கலிய பலத்தைத் தந்து தாம்பத்ய வாழ்க்கையை நீடூழி காலம் நிலைநாட்டுகிறது. இவ்விரதத்தை அது முதல் எல்லாப் பெண்மணிகளும் திரிகரண சுத்தியுடன் அனுஷ்டிக்கலானார்கள்.

சுபம், சுபம்!

# ஸ்ரீ லக்ஷ்மிதேவி பூஜை.

ஸ்ரீ லக்ஷ்மி தேவி செல்வத்திற்கு அதிபதியான தேவி. நாராயணமூர்த்தியினுடைய சக்தி ஸொரூபமே ஸ்ரீ லக்ஷ்மி. நாராயணமூர்த்தி விஷ்ணுப்ரபு எனவும், ஹரி எனவும் விளங்கி வருகிறார். நாராயண பகவான் பிரஹ்மனின் ரக்ஷிக்கும் அம்சமாக இலங்குகிறார். அவர் சுத்த ஸத்வத்திற்கு உருவகமாய் இருக்கிறார். லக்ஷ்மி அவருடைய காரண சரீரம். லக்ஷ்மி மாயை. அவள் உலகம் முழுவதையும் தனது ஆவரண சக்தியால் மயக்குகிறாள். விக்ஷேப சக்தியைக் கொண்டு உலகத்தைத் தோற்றுகிறாள்.

RangaRakes
tamilnavarasam.com

அழகு, அருள், கண்கவர் இயற்கைக் காட்சி, வசீகரப்படுத்தும் ஊர்க் காட்சிகள், ஒழுக்கம், அன்பு, சுபிட்சம், இன்னிசை, பஞ்ச பூதங்கள், பஞ்ச பூதங்களுடன் கூடியவைகள், அந்தக்கரணங்கள், மனம், பிராணன், புத்தி ஆகியவைகள் யாவும் ஸ்ரீ லக்ஷ்மி தேவியின் வடிவங்கள். ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டலக்ஷ்மிகளாக வடிவெடுத்துள்ளாள் :—(1) தனலக்ஷ்மி, (2) தான்யலக்ஷ்மி, (3) ஜெயலக்ஷ்மி, (4) கஜலக்ஷ்மி (5) வித்யாலக்ஷ்மி (6) தைரியலக்ஷ்மி (7) மஹாலக்ஷ்மி (8) சௌபாக்யலக்ஷ்மி.

வைஷ்ணவ சமயத்தில் தென் கலையைச் சார்ந்தவர்கள் லக்ஷ்மியை விஷ்ணுவின் பத்தினி என்றும், ஸ்திரீ வடிவத்தில் உற்பத்தி செய்யப்பட்டவள் என்றும், தெய்வீகத் தன்மையளாயினும் புருஷாகாரமாய் மந்திரி போன்று நடிக்கிறாள் என்றும், முக்திக்குத் தக்க ஹேதுவாக இல்லை என்றும் கூறுகிறார்கள்; வடகலையைச் சார்ந்தவர்கள், லக்ஷ்மியை அனந்தரூபி எனவும், ஸிருஷ்டிக்கப்படாமல் சுயம்புவானவள் எனவும், முக்தி பெறுவதற்குச் சிறந்த ஹேது எனவும், நாராயணனுக்குச் சமமாக வணங்கத் தக்கவள் எனவும் கூறுகிறார்கள்.

அவள் ஓர் பதிவிரதை! நாராயணமூர்த்திக்கு முழு மனத்துடன் பணிவிடை செய்கிறாள். ஆதிசேஷன் மீது சயனித்துக் கொண்டிருக்கும் நாராயணமூர்த்தியின் படத்தைப் பார்த்ததில்லையா? இப்படத்தில் ஸ்ரீ லக்ஷ்மி அவர் திருவடியின் அருகில் அமர்ந்துள்ளாள். எப்போதும் அவருக்குப் பணிவிடை புரியச் சித்தமாயிருக்கிறாள். எங்கு நாராயணமூர்த்தி உளரோ, அங்கு லக்ஷ்மி இருக்கிறாள். ஹரியை வணங்கினால், லக்ஷ்மி தேவி நீ செல்லும் இடமெல்லாம் உன்னைப் பின் தொடர்வாள்.



இந்த ரஸமான கதையைக் கேளுங்கள். ஒரு காலத்தில் லக்ஷ்மிக்கும் நாராயணமூர்த்திக்கும் இடையில் "யார் பெரியவர்?" என்ற விவாதம் எழுந்தது. லக்ஷ்மி, "இந்த உலகத்தில் தங்களைக் காட்டிலும் அதிகமாகத் துதிக்கப்படுகிறவள் நான்தான். ஆகையால் தங்களைக் காட்டிலும் நான் பெரியவள்" என வாதாடினாள். இதை பரீக்ஷிக்கலாம் என்றார் நாராயணமூர்த்தி. ஏழை பிராம்மணர் கோலங்கொண்ட நாராயணமூர்த்தி கற்றறிந்த ஓர் பண்டிதரை நாடினார். தமது வீட்டில் தங்குமாறு பிராம்மணரை வேண்டிக் கொண்டார் அப்பண்டிதர். அதற்குப் பிராம்மணர், "எக்காலத்திலும் என்னை இந்த அறையை விட்டு வெளியே அனுப்புவதில்லை என்று உறுதியாகச் சத்தியம் பண்ணினால் மாத்திரமே இங்கே நான் தங்குவேன்" என்றார். பண்டிதர் அதற்கு உடன்பட்டு சத்தியம் பண்ணினார். அதன்பின் பிராம்மணர் அங்கே தங்கலானார். சிலகாலத்திற்குப் பின்னர் லக்ஷ்மி தேவி சாதாரண பெண் வடிவந்தாங்கி அதே பண்டிதரிடம் போய் உணவு கேட்டாள். பண்டிதர் அவளுக்கு உணவு படைத்தார். அவள் தன்னுடைய சொந்தமான தங்கத் தட்டையும் தங்கக் கோப்பைகளையும் உணவு உட்கொள்ளும்போது உபயோகித்தாள். உணவு உட்கொண்ட பிறகு, தங்கத் தட்டையும் தங்கக் கோப்பைகளையும் அங்கேயே வைத்துவிட்டுப் போய்விட்டாள். போகும்போது, "பண்டிதரே! இவை எனக்கு வேண்டாம். தாங்களே எடுத்துக்கொள்ளுங்கள்" என்று கூறினாள். மறுநாள் அவள் வந்து உணவு கேட்டாள். பண்டிதர் படைத்தார் உணவை. இந்தத் தடவை, அவள் அநேக தங்கத்தட்டுகளையும், தங்கக் கோப்பைகளையும் உபயோகித்தாள் உணவு சாப்பிட்ட பிறகு, பண்டிதரைப் பார்த்து, "இந்தத் தட்டுகளை

RangaRakes tamilnavarasam.com

யெல்லாம் வைத்துக்கொள்ளுங்கள். எனக்குத் தேவை இல்லை" என்றாள். பண்டிதர் அப்பெண்ணை தங்கள் வீட்டில் தங்கியிருக்குமாறு வேண்டினார். தினந்தோறும் தங்கத் தட்டுகளும், தங்கக் கோப்பைகளும் தனக்குக் கிடைக்குமென்று பண்டிதர் கருதினார். அதற்கு அப் பெண், "பிராம்மணர் தங்கியுள்ள அதே அறையை எனக்குக் கொடுத்தால் மாத்திரம், இங்கே நான் தங்க முடியும்" என்று விடை பகர்ந்தாள். பண்டிதர் ஒப்புக் கொண்டார். அவர் இருதலைக் கொள்ளி எறும்பு போல என்ன செய்வதென்று ஒன்றுந் தோன்றாதவராய்க் கலங்கினார். ஏனெனில், அறையை விட்டு வெளியேற்றுவதில்லை என்று பிராம்மணர்க்கு ஏற்கனவே வாக்குறுதி பண்ணியாகிவிட்டதல்லவா? பண்டிதர் பிராம்மணரிடத்தில் போய், "மரியாதைக்குரிய அந்தணரே! தங்களுக்கு இந்த அறையைக் காட்டிலும் பன்மடங்கு வசீகரமும் சௌகரியமும் நிறைந்த அறையைத் தருகிறேன். தயவுசெய்து இந்த அறையைவிட்டு வெளியேறுங்கள்" என்று கெஞ்சினார். பிராம்மணர், "முடியாது. ஏற்கனவே நீங்கள் சத்தியம் பண்ணிக் கொடுத்தீர்கள்" என்று கூறினார். பண்டிதர் தமது குமாஸ்தாவை அனுப்பி, பிராம்மணரை பலவந்தமாக வெளியேற்றுவித்தார். தங்கத் தட்டுக்கள், தங்கக் கோப்பைகள் மீது கொண்ட பேராசை அவரை அப்படிச் செய்யும்படி தூண்டியது. பிராம்மணர் வெளியேற்றப் பட்ட அதே சமயம், பெண் வடிவத்தில் வந்த லக்ஷ்மி தேவியும் அவ்விடத்தை விட்டு அந்தர்த்தானமானாள்.

லக்ஷ்மி, நாராயணமூர்த்தியைப் பார்த்து, "நாதா, இங்கே பாருங்கள். தங்களைக் காட்டிலும் என்னைப் பன்மடங்கு அதிகமான பக்தியுடன் வணங்குகிறார்கள். என் பொருட்டு அப்பண்டிதர் தங்களைத் துரத்தினார்"



என்று கூறினாள். அதற்கு நாராயணமூர்த்தி, "அன்பிற் குரிய லக்ஷ்மி! நீ பேசுவது தவறு நான் இல்லாமல் நீ இருக்க முடியாது. அறையை விட்டு நான் வெளியேறிய அக்கணமே நீயும் என்னைப் பின்பற்றினாய். எங்கெங்கு நான் இருக்கிறேனோ, நீயும் கூடவே என்னுடன் தங்குவாய். என்னை மீறி, சுயேச்சையான இருப்பு உனக்குக் கிடையாது" என்று விளக்கினார் உண்மையை.

தென்னிந்தியாவில் பெண்கள் குறிப்பிட்ட ஓர் நாளில் ஸ்ரீ லக்ஷ்மி தேவியை வழிபடுகிறார்கள். அவர்கள் வரலக்ஷ்மி விரதம் கொண்டாடுகிறார்கள். வட இந்தியாவிலோ, லக்ஷ்மிதேவியை தீபாவளி நாளன்றே வணங்குகிறார்கள். வீட்டை சுண்ணாம்பு பூசி அலங்கரிப்பார்கள். வியாபாரிகள் இந்த தினத்தில் புதுக் கணக்கு எழுதுவார்கள். தங்கத்தையும் வெள்ளியையும் வழிபடுவார்கள்.

திருப்பாற்கடலைக் கடைந்தபோது, ஆலகால விஷம், காமதேனு, உச்சைசிரவஸ், ஐராவதம், கௌஸ்துபமணி, பாரிஜாதம், அப்ஸரஸ்திரீகள், ஸ்ரீ லக்ஷ்மிதேவி, கல்பகவிருக்ஷம், சிந்தாமணி, சந்திரன், பாஞ்சஜன்யம், மது, தன்வந்திரி ஆகிய பதினான்கு ரத்தினங்கள் கிடைத்தன. லக்ஷ்மிதேவிக்காக, தேவ அசுரர்களிடையே போர் மூண்டது. இறுதியில், ஸ்ரீமந் நாராயண மூர்த்தியையே ஸ்ரீ லக்ஷ்மிதேவி மணம் புரிந்தாள்.

ஸ்ரீ லக்ஷ்மியின் நாமம் 'ஸ்ரீ' என்பது. எல்லா ஹிந்துக்களுக்கும் ஏற்பட்ட உண்மையான பட்டம் "ஸ்ரீ" என்பதாகும். இதர பட்டங்களைக் காட்டிலும் "ஸ்ரீ" மகா விசேஷமானது, எல்லா நாமங்களுக்கு

RangaRakes
tamilnavarasam.com

முன் "ஸ்ரீ" சேர்க்கவும். 'ஸ்ரீ சிவராம்' என்று கூற வேண்டும்.

ஸ்ரீ லக்ஷ்மிதேவி பக்தர்களுக்கு செல்வமும், எல்லா விதமான லௌகிகச் சுபிட்சமும் தருவது மாத்திர மன்றி, தெய்வீக ஞானமும் அருளுகிறாள் அவள் வித்யா சக்தியும் கூட. ஸ்ரீ லக்ஷ்மிதேவி தனது பர்த்தாவிடம் பக்தர்களை அறிமுகப்படுத்தி அவர்கள் மோக்ஷம் பெறுவதற்காகச் சிபார்சும் செய்கிறாள்.

ஸ்ரீ லக்ஷ்மிதேவி இல்லாமல், சந்நியாசிகள் கூட தங்கள் ஸ்தாபனங்களை நடத்த முடியாது. பிரசாரத் திருப்பணியையும் மேற்கொள்ள முடியாது. லோக சங்கிரஹத்தின் பொருட்டு அவர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மி தேவியின் துணை தேவைப்படுகிறது. ஸ்ரீ சங்கரர் பரா சக்தியையும், லக்ஷ்மியையும், சரஸ்வதியையும் வழி பட்டுத் தமது பிரசார வேலையில் வெற்றி கண்டார். எல்லாப் பெரிய தீர்க்கதரிசிகளும், தேவதூதர்களும் முற்காலத்தில் ஆன்மீயத் துறையில் மகத்தான காரியங்களைச் சாதித்தார்கள். அவர்கள் யாவரும் சக்தி தேவி, ஸ்ரீ லக்ஷ்மிதேவி, சரஸ்வதிதேவி ஆகிய மூவருக்கும் சிறந்த பக்தர்களாக இருந்தார்கள்.

ஸ்ரீ லக்ஷ்மிதேவி உங்கள் யாவருக்கும் ஆரோக்கியமும், நீண்டாயுளும், ஸாந்தியும், சுபிட்சமும் தந்தருளுவாராக. ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் மகா மந்திரத்தை நாம் உச்சாடனஞ் செய்வோமாக:—

**ஓம் மஹாதே³வீ ச வித்³மஹே**
**விஷ்ணு பத்நீச தீ⁴மஹி**
**தன்னோ லக்ஷ்மீ ப்ரசோத³யாத்.**



ஸ்ரீ லக்ஷ்மிதேவியைத் தெரிந்து கொண்டு மகாப் பிரபு நாராயண மூர்த்தியைத் தியானிப்போமாக. ஸ்ரீ லக்ஷ்மிதேவி நமக்கு வழிகாட்டியும் ஞானம் புகட்டியும் திருவருள் புரிவாராக. லக்ஷ்மிதேவி நாமத்தை இம் மஹத்தான தினத்தில் பாடுவோமாக.

**"ஜெயஸ்ரீலக்ஷ்மி, ஜெயஸ்ரீலக்ஷ்மி,**
**ஜெயஸ்ரீலக்ஷ்மி பாஹிமாம்"**
**"ஜெயஸ்ரீலக்ஷ்மி, ஜெயஸ்ரீலக்ஷ்மி,**
**ஜெயஸ்ரீலக்ஷ்மி ரக்ஷமாம்"**

லோகமாதா ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் மஹிமை ஓங்குமாக! பிரபஞ்சத்தின் பிதா ஸ்ரீ நாராயண மூர்த்தியின் மஹிமை ஓங்குமாக!

[தினசரி குறைந்தபக்ஷம் 108 தடவையாவது ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் நாமத்தை உச்சரிக்கவும்.]

## நரசிம்ஹ ஜயந்தி

பிரஹ்மாவின் புத்திரர்களான சனத் குமாரர்கள் ஐந்தாறு வயது உள்ள பாலர்கள். முகத்தில் தெய்வீக ஒளி மின்னிக்கொண்டிருந்தது. ஆனால் மரீசி போன்ற மஹரிஷிகளைக் காட்டிலும் ஞானத்தில் வயது முதிர்ந்தவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் மகாவிஷ்ணுவைத் தரிசிக்கச் சென்றார்கள். வைகுண்டத்தில் ஹரிக்குக் காவலாளிகளாகிய ஜெய, விஜய என்பவர்கள் ஹரியைப் பேட்டி காண இக்குழந்தைகளை உள்ளே விடவில்லை. இவ்விரு காவலாளிகள் திதித் தேவிக்கு புத்திரர்களாகப் பிறந்தார்கள். மூத்தவன் ஹிரண்யகசிபு. இளையவன் ஹிரண்யாக்ஷன்.

RangaRakes tamilnavarasam.com

ஹிரண்யாக்ஷன் வராகமூர்த்தியாக அவதரித்த மகாவிஷ்ணுவினால் கொல்லப்பட்டான். தன் தம்பியின் மரணத்தைக் குறித்து ஹிரண்யகசிபுவுக்கு மிக்க கோபம் உண்டானது. அவன் "தம்பியைக் கொல்லுவதற்கு மாயாவராகாவதாரமெடுத்த மகாவிஷ்ணுவின் கழுத்திலே அழுத்துவேன் என் திரிசூலத்தை" எனக் கர்ஜித்தான்.

ஹிரண்யகசிபு மந்திரகிரிமேலே உயர்த்தப்பட்ட கைகளுடனும் மேனோக்கும் கண்களுடனும் காலின் கட்டை விரல்களின் மீது நின்றவனாய்த் தவம் புரிந்தான். பகைவனால் வெல்லமுடியாதவனாயும், ஆயுதங்களால் கொல்லப்படாதவனாயும், மூப்பு மரணங்களால் பாதிக்கப்படாதவனாயும் சர்வ பராக்கிரமசாலியான சக்கரவர்த்திக்குரிய ஆற்றல்பெறவேண்டும் என்பது அவன் கருத்து. ஜலம்கூட பானம் பண்ணாமல் நூறு தேவ வருஷங்கள் வரை கடுந்தவம் புரிந்தான். (சாதாரணமாக ஒரு வருஷம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். இத்தகைய முப்பது நாள் ஒரு மாதம். பன்னிரெண்டு மாதம் ஒரு தேவ வருஷம்). பிரஹ்மதேவர் அவன்முன் தோன்றி, "ஓ, ஹிரண்யகசிபு! உன் தவத்தைக் கண்டு மகிழ்ந்தேன்." ஏதாவது வரங் கேள். எனத் திருவாய்மலர்ந்தருள, ஹிரண்யகசிபு பிரஹ்மாவின் தர்சனத்தால் பெரிதும் சந்தோஷித்தவனாய் "பெருமானே! தங்களால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர்களில் ஏதாவது ஒன்றினால்கூட எனக்கு மரணம் வரக்கூடாது. அத்தகைய வரத்தை அருளுங்கள்" என்று வேண்டினான். அப்படியே வரந்தந்தார். இந்த வரத்தின் பலத்தினால் ஹிரண்யகசிபு தேவேந்திரனை சிம்மாசனத்தை விட்டுத் துரத்தினான். தேவர்களைப் பலவாறு ஹிம்சித்தான். தேவர்கள் விஷ்ணுமூர்த்தி



யைப் போற்றித் துதித்துத் தங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள் வானத்தில் ஓர் அசரீரி, "ஓ தேவர்களே! அஞ்சாதீர்கள். ஹிரண்யகசிபுவின் அடாத செயல்களை அறிவேன், அவனை ஒழித்துக் கட்டுகிறேன். அதற்குத் தக்ககாலம் வரட்டும். எல்லோருக்கும் என் தரிசனத்தால் அனுக்கிரகம் உண்டாகும்" என்று முழங்கியது.

ஹிரண்யகசிபுவின் புத்திரனான பிரகலாதன் பாலப்பருவத்திலிருந்தே மிகுந்த பக்தி வாய்ந்தவன். அவன் ஜிதேந்திரன். மகாவிஷ்ணுவின் மீது ஏற்பட்ட உண்மையான பக்தி விஸ்வாசத்தால் அவன் இதயம் நிறைந்தது. சந்த, மார்க்க எனும் அசுர குருமார்களிடத்தில் அவன் கல்வி பயில அனுப்பப்பட்டான். இதர பையன்களுடன் இவனுக்குப்பாடம் கற்பித்தார்கள். மாணவர்களுக்கு ஒரே பொருள் அதாவது ஹரிநாமமொன்றினையே இடையறாது சிந்திக்கத் தூண்டுகிற நல்லுபதேசம் பண்ணுபவன் எவனோ அவனே குருவும் பிதாவும் மாதாவும் நண்பனும் ஆகிய நால்வரின் தன்மை பொருந்தியவன். இக்கருத்தையே பிரகலாதன் உடும்புப் பிடியாய் இருத்திக் கொண்டான் இதயத்திலே. இத்தகைய பாடத்தைப் பிரகலாதன் தன் குருமார்களிடம் பெற இயலவில்லையாதலால், அக்கல்வி பயனற்றதெனக் கண்டுகொண்டான். தகப்பனார் ஒரு நாள் அவனைப்பார்த்து, "என் அன்பே! உன் பாடங்களில் மிகவும் சிறந்ததென நீ நினைக்கிற பகுதியை எங்கே எனக்குச் சொல்லு" என்று வினவ, பிரகலாதன், "பிதாவே! நரகத்திற்குக் காரணமாகிய என் வீட்டைத் துறந்துவிட்டு, ஹரிமூர்த்தியிடம் சரணடைந்து, ஏகாந்த ஸ்தலத்தை நாடி ஆழ்ந்து தியானம் பழகுவதே மகா உத்கிருஷ்டமானது" எனச் சட்டென்று சாற்றினான். ஹிரண்யகசிபு சிரித்தான்.

RangaRakes tamilnavarasam.com

தவறான போதனைகளினால் தன் மகனுடைய புத்தியைக் கெடுத்து விட்டார்களெனக் கூறினான். நல்ல முறையில் அவனை போதிக்கும்படி உபாத்தியாயர்களிடம் வற்புறுத்தினான். அசுர குருமார்கள் பிரகலாதனைத் தம் வீட்டிற்கு அழைத்துப்போய், "எவனொருவன் குலத்திற்கு அழிவைத் தேடுகிறானோ, குடும்பத்திற்கு அவமானம் கொண்டுவருகிறானோ, ஹரிநாமத்தை ஜபித்துக்கொண்டு நிலை தவறிய புத்தியைக் கொள்ளுகிறானோ அவன் தண்டிக்கப்படவேண்டும். இனிமேல் ஹரி என்ற சொல்லை உச்சரிக்கக்கூடாது" என்று கர்ஜித்து அதட்டி மிரட்டினார்கள்.

சில மாதங்கள் சென்றதும், பிரகலாதன் தகப்பனார் முன் கொண்டுவரப்பட்டான். படிப்பைப்பற்றித் தகப்பனார் கேட்கப் பிரகலாதன் "ஹரி பகவான் கதைகளை உற்றுக்கேட்டல், பகவானின் நாமங்களையும் புகழையும் பாடுதல், அவனை இடையறாது சிந்தித்தல், பகவானின் திவ்ய பத்ம பாதங்களில் விழுந்து சேவை செய்தல், பகவானுக்கு நைவேத்தியங்களைப் படைத்தல், பகவானை வாழ்த்தி வணங்குதல், பகவான் எழுந்தருளியுள்ள கோவில்களில் திருப்பணி செய்தல், பகவானை நண்பனாகக் கொள்ளுதல், தன்னையே பகவானிடம் அடைக்கலம் புகுத்தல் ஆகிய ஒன்பதுவிதமான பக்தியைப் பகவானிடம் செலுத்தப் பழகுதல் — இவைதான் மகா மேலான பாட போதனைகள்" என்று பதில் கூறினான். இதைக் கேட்டதும், ஹிரண்யகசிபுவுக்குக் கோபம் கொந்தளித்தது. அசுரர்களைப் பார்த்து "பராக்கிரமசாலிகளே! இப்பையனை இக்ஷணமே கொல்லுங்கள்; கழுத்தைப் பிடித்துத் தள்ளுங்கள். மன்னனைக் கொல்றான் இவன். இவன் தன் பெற்றோர்களைப் புறக்கணித்து விஷ்ணுவின் பாதங்களைச் சேவிக்



கிறான். யானைகளைவிட்டு இவனை மிதிக்கச் செய்தல், கொடிய பாம்புகளைக் கடிக்கவிட்டுச் சாகடித்தல், துர்மந்திரங்களைப் பிரயோகித்துக் கொல்லுதல், மலையுச்சியிலிருந்து இவனை கீழே உருட்டித் தள்ளுதல், இருண்ட அறைகளில் அடைத்துவைத்தல், விஷமிடுதல், பட்டினி போடுதல், பனிக்கட்டி போன்ற குளிருக்கு உட்படுத்தல், புயல் காற்றுக்குக் காவு கொடுத்தல், அக்கினிக்கு அர்ப்பணித்தல் ஆகிய உபாயங்களைக் கையாண்டு எப்படியாவது இவனைக் கொல்லுங்கள்" என்று உத்திரவிட்டான். இவைகளையெல்லாம் அசுரர்கள் கையாண்டும் பயனில்லை. அவர்கள் முயற்சிகள் யாவும் அவலமாயின. எல்லா ஹிம்சைகளுக்குமிடையில் பிரகலாதன் பகவந்நாமத்தை நிரம்பவும் மகிழ்ச்சியோடு உச்சரித்தான். அவனுக்கு எவ்விதத் தீங்கும் நேரவில்லை. இப்பையனைக் கொல்ல ஹிரண்யகசிபுவால் முடியவில்லை. அவனுடைய நம்பிக்கைகள் வீணாயின. இறுதியில், பிரகலாதன் அஞ்சாதவன் என்றும், மரணமற்றவனென்றும், அளக்கவொண்ணாத பெருமை படைத்தவனென்றும் ஹிரண்யகசிபு பாரமான நெஞ்சுடன் ஒப்புக்கொண்டான்.

சொல்லொணாச் சித்திரவதைகளினூடே பிரகலாதன் அசுரர்களைப் பார்த்து, "அன்புள்ள நேயர்களே! பிரஹ்மா முதல் அற்பப் புல் இறுதியாகவுள்ள சிருஷ்டி முழுவதும் மாயை. ஏதாவது உண்மை இருக்குமானால், ஹரிபகவானின் நாமம், ஹரிபகவானின் நாமமே உண்மை. இது முக்காலும் சத்தியம். எல்லா உயிர்களுக்கும் ஹரிபகவான் கர்த்தாவும் ரக்ஷகரும் ஆத்மாவும் ஆவார். ஒவ்வொரு நாளும் அவரது தாமரை மலர்ப் பாதங்களை வணங்குங்கள். எல்லோருக்

RangaRakes tamilnavarasam.com

கும் சிறந்த புகலிடம் அவரேதான். அவர் பிரஹ்மானந்தமும், நித்தியத்துவமும், நித்தியஸாந்தியும் வழங்குகிறார். உலகாயத மக்கள் விலை மதிக்கொணாத தங்கள் வாழ்வை சிற்றின்ப சுகங்களுக்கு விற்கிறார்கள்! பிரமை கொண்ட ஆத்மாக்கள் அந்தோ பரிதாபம்! அவர்கள் தங்கள் சக்தி வாய்ந்த இந்திரியங்களினால் வஞ்சிக்கப் படுகிறார்கள்." என்று உபதேசிப்பான்.

பிரகலாதன் பள்ளிக்கூட நண்பர்களைப் பார்த்துக் கூறியதாவது:- "அன்புடையீர்! எல்லா இனிப்புப் பதார்த்தங்களிலும் மிகவும் இனிப்பு வாய்ந்ததும், எல்லா மங்களப் பொருள்களிலும் விசேஷ மங்களம் பொருந்தியதும் தூய்மைபடுத்தும் எல்லாவித இயக்கங்களிலும் மிக்க தூய்மைப்படுத்தும் சக்தி படைத்ததுமான ஓர் பொருள் இருக்குமானால் அதுதான் ஹரிபகவான் நாமம். ஹரிபகவான் நாமம் மாத்திரமே. உலகாயத மனப்பான்மை கொண்ட அசுரர்களின் உறவை உதறித் தள்ளுங்கள். உங்களுடைய எல்லாக் கொடிய செயல்களிலிருந்தும் விலகுங்கள். சத்ஸங்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். பரம்பொருளான நாராயண மூர்த்தியிடம் புகலிடம் தேடுங்கள். அவர் ஸாந்தி, ஆனந்தம், அறிவு ஆகிய அம்சங்களால் உருவமைக்கப் பெற்றவர்."

"இவ்வுடல் ஐந்து பூதங்களால் ஆக்கப் பெற்றது. நேதி, நேதி எனப்படும் இதுவல்ல – இதுவல்ல என்ற கோட்பாட்டைக் கொண்டு, மேலே ஏற்றப்பட்டிருக்கும் சரீர வாகனத்தை ஆராய்ந்து, கழிவு முறையைக் கையாண்டால் தூய ஆத்மாவைத் தெரிந்துகொள்ளலாம். உலகம் முழுவதையும் வெறும் சூன்ய மயமாக்கிப் பிரகாசிப்பது சர்வஞ்ஞத்துவமும், சர்வானந்தமும் சர்வத் தூய்மையும் வாய்ந்த ஹரிநாமம்; ஹரிநாமம்



மாத்திரமே. எல்லாரிடத்திலும் அவர் வீற்றிருக்கிறார். ஹரிநாமத்தை மாத்திரமே பக்தியுடன் பாடுகிற தமது பக்தர்களிடம் அவர் சதாகாலமும் வாசம் பண்ணுகிறார். ஹரிபகவானிடம் நீங்கள் பக்தி பழகுங்கள். அப்புறம் தான் சாசுவதமான, நிஜமான ஆனந்தமும், அறிவும் பெறலாம். இந்திரிய சிற்றின்ப சுகங்களை நாடி ஓடுவதால் என்ன பயன்? பகவானை இடையறாது சிந்தனை செய்யுங்கள். அவர் இனிய நாமத்தைப் பாடுங்கள். அப்பால் தான் ஜனன மரண ஸாகரத்தை உங்களால் கடக்கக் கூடும்."

அசுர இளைஞர்கள் பிரகலாதனுடைய இந்த இனிய சொற்களைக் கேட்டபோது தங்கள் உபாத்தியாயர்களின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவே இல்லை. பிரகலாதனுடைய பொன் போன்ற போதனையால் அவர்கள் மிகவும் கவர்ச்சியடையப் பெற்றவர்களாய் அவனைப் பின்பற்றத் தொடங்கினார்கள். எல்லா இளைஞர்களும் விஷ்ணுமூர்த்தியின் நாமத்தைப் பாடவும், மகிழ்ச்சியால் பிரகலாதனோடு ஆடவும் தொடங்கினார்கள். இதை உபாத்தியாயர்கள் கண்டு கொண்டார்கள். அவர்கள் பிரகலாதனைக் கூட்டிக் கொண்டு அரசரிடம் ஓடிப்போய் எல்லாப் பையன்களின் நடத்தையும் பிரகலாதனின் உபதேசங்களும் பற்றி விவரித்தார்கள். தன் மைந்தனின் மனப்பான்மையையும் எல்லா அசுர இளைஞர்களின் மேல் வைத்துள்ள செல்வாக்கையும் கேட்டதும் ஹிரண்ய கசிபுவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று அவன் பிரகலாதனை நோக்கி "முட்டாளே! புத்தி தடுமாறின இழியவனே! குலத்தைக் கெடுக்க வந்த கோடாரிக் காம்பே! இப்போதே உன்னைக் கொல்லுவேன். என் வார்த்தைகளை நீ அலட்சியஞ் செய்ததுமன்றி உன் பெற்றோர்களுக்கு ஆற்றவேண்டிய

RangaRakes tamilnavarasam.com

"கடமைகளையும் புறக்கணித்தாய்" என்று வைதான். பிரகலாதன் ஸாந்தமாய் "அன்புள்ள பிதாவே! தாங்கள் பலசாலியாயிருக்கிறீர்களென்பதல்ல, மூன்று உலகங்களையும் சிருஷ்டித்த ஹரிபகவான் – எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாயிருப்பவர். அவரே சர்வ வல்லமை பெற்றவர். அகம்பாவமும் தற்பெருமையும் கொண்டு இறுமாந்து நிற்கிறீர்கள். சக்திவாய்ந்த இந்திரியங்களால் தாங்கள் இழுத்துச் செல்லப்படுகிறீர்கள். தங்களுடைய அசுர இயல்பை விட்டுவிடுங்கள். விஷ்ணுமூர்த்தியிடம் பக்தியை அதிகரிக்கவும், விஷ்ணுவின் முன்னால் எல்லா வீரதீரர்களும் அசுரர்களும் காற்றிலகப்பட்ட பஞ்சு போன்றவர்களே. உண்மையான புகலிடத்தை பக்தியின் மூலம் விஷ்ணுவினிடம் தேட முடியும். ஆகையால், ஹரிபகவானிடம் இந்த க்ஷணம் தொட்டு தங்கள் மனம் தஞ்சமடையட்டும். நாராயணா, நாராயணா எனும் மகா மந்திரம் தங்கள் கண்களைத் திறக்கட்டும்" என்று கூறினார்

இதைக் கேட்டதும் ஹிரண்ய கசிபு தன்னை மறந்தவனாய், "ஓ முட்டாள், நீ அதிகம் பிதற்றுகிறாய். யமலோகத்திற்கு உன்னை அனுப்புகிறேன். பூமியில் மற்றொரு சக்ரவர்த்தி எங்கே இருக்கிறார்? நீ வானளாவப் புகழ்ந்து பேசுகிற உன்னுடைய ஹரிநாராயணன், விஷ்ணு எங்கே இருக்கிறார்?" என்று கர்ஜித்தான். உடனே பிரகலாதன், "ஹரிபகவான் இங்கே இருக்கிறார்; அங்கே இருக்கிறார்; எங்கும் இருக்கிறார்" என்று பதிலளித்தான். ஹிரண்ய கசிபு "அப்படியானால் இத்தூணில் இல்லையா?" என்று கேட்டான்.

பிரகலாதன், "நிச்சயமாய் அவர் இத்தூணிலும் இருக்கிறார்" என்று பதிலளித்தான். அந்த ஹரியைத் தூணில் ஹிரண்யகசிபு பார்க்கவில்லை. "மூடனே!



இத்தூணை உதைக்கிறேன், உனது ஹரி அங்கே இருக்கிறாரா இல்லையாவென்பதைப் பார்க்கிறேன். இத்தூணில் ஹரி இல்லையென்றால் இந்த வாளினால் உன் தொண்டையை அறுக்கிறேன். உன் ஹரி உன்னைக் காப்பாற்றட்டும்" என்று முழங்கினான். ஹிரண்யகசிபு தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து, தூணை உதைத்தான். அத்தூணிலிருந்து கர்ஜனைக்குரல் ஒன்று வெளிப்பட்டது. இதனால் பிரபஞ்சம் முழுதும் துண்டு துண்டாகத் தெறித்தது போலிருந்தது. ஹரிபகவான் நரசிம்மாவதாரமெடுத்துக் கொண்டு தூணிலிருந்து வந்தார். இந்த உருவம் பயங்கரமாயிருந்தது. என்ன அதிசயம்! அந்த வடிவம் மனிதன் அல்ல மிருகமும் அல்ல. மனிதனும் சிங்கமும் இணைந்த வடிவம் அது. பெருங்கிலியினால் அசுரர்கள் பலரும் தலைதெறிக்க ஓடி மறைந்தார்கள்.

பகவானின் ஒளிபொருந்திய வடிவம் ஹிரண்ய கசிபுவின் கண் கூசச் செய்தது. தக்ஷணமே அவன் தன் வாளையும் கேடயத்தையும் எடுத்துகொண்டான் நரசிம்ம மூர்த்தியைத் தாக்குவதற்கு. தவளையைப் பாம்பு பிடித்துக் கொள்வது போன்று, பகவான் ஹிரண்யகசிபுவைப் பற்றிக் கொண்டார். வாசலின் நிலையில் உட்கார்ந்துகொண்டு அவனை தன் மடிமீது இருத்தி, கருடன் பாம்பைக் கிழிப்பது போன்று பகவான் தமது நகங்களால் ஹிரண்யகசிபுவைக் கிழித்தார்.

அப்பால், தேவர்கள் விமானங்களில் தோன்றினார்கள். விமான வரிசைகள் வானத்தை நிரப்பின. கந்தருவர்கள் தெய்வீக கீதங்களை பாடினார்கள். அப்ஸர ஸ்திரீகள் ஆடினார்கள்.

பிரகலாதன் தெய்வீக மகிழ்ச்சியிலும் பக்திப் பரவசத்திலும் ஆழ்ந்தான். பக்திப் பெருக்கினால் அவன்

RangaRakes tamilnavarasam.com

கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் அருவிபோலப் பொழிந்தது. அவன் பகவானின் திருவடிகளின் முன்னால் சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு, "காருண்ய பகவானே! நான் தங்கள் பக்தி மிகுந்த தொண்டன்; ஆசை எதுவும் கிடையாது. தாங்கள் என் எஜமானர். இப்பிரபஞ்சம் முழுமைக்கும் ரக்ஷகர்த்தா தாங்களே. அரசர்களுக்கெல்லாம் தாங்கள் அரசர். உலகத்தைத் துறந்தவனும், தன் ஆசைகள் எல்லாவற்றையும் அடக்கியவனுமான பக்தன் மேலானவன். மன ஏகாக்ரத்தினால் செய்த தற்சோதனையாலும் தங்களை வழிபட்ட பக்தியாலும் பூரணத்துவம் விருத்தியாகிறது. மனித வர்க்கத்திற்கே நேரிடக்கூடிய அக்ஞானமெனும் விக்கினமானது பரிபூரணத்துவம் விருத்தியாவதன் மூலம் படிப்படியாக விலகுகிறது. இப்பேர்ப்பட்ட பக்தனுடைய மனக்கதவண்டை தாங்கள் பிரசன்னமாகிறீர்கள். தாங்கள் தீனதயாளு, ஆபத்பாந்தவர், முக்தி வழங்குபவர்! தாமரை மலர்ப்பாதங்களின் மேல் நான் சரணடைகிறேன். ஆசையற்றவனாய் என்னை ஆக்குவீர்களாக" என்று கைகூப்பிப் பிரார்த்தித்தான்.

குழந்தையின் ஆத்மார்த்த பிரார்த்தனையினால் பகவான்; "உயர்ந்த ரகமான தூய பக்தி உன்னிடம் உளது, அதனால் மகிழ்கிறேன். உண்மையான உனது பக்தியினால், நீ உனது தகப்பனாரையும் இருபத்தோருவது தலைமுறை உன் தகப்பனாரின் முன்னோர்கள் வரையும் தூய்மைப் படுத்திவிட்டாய். பக்தி எங்கு வாசம் புரிகிறதோ அந்தப் பூமி புனிதமடைந்துவிடுகிறது உன்னைச் சரணடையும் அன்பர்கள் கூட என்னுடைய பக்தர்களாகிவிடுகிறார்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி அனுக்கிரகித்தார்.



பக்தர்களில் மிகவும் பெருமை வாய்ந்த பிரகலாதனின் மகிமையை – இக்கதையைப் பக்தி சிரத்தையோடும் தூய உள்ளத்தோடும் சிரவணஞ் செய்கின்றவர்கள் நித்தியத்துவமும், நித்திய ஸாந்தியும் உத்கிருஷ்டமான ஆனந்தமும், பரமாத்மாவின் மேலான அறிவையும் பெற்று உய்வார்களாக.

ஓம் தத் ஸத்.

## உபவாசம் — அதன் நன்மைகள்.

(ஹிருஷிகேஸ், ஸ்வாமி சிவானந்தர்
ஆங்கிலத்தில் எழுதியது.)

காலையில் வெறும் வயிற்றுடன் இருப்பவனை வைத்தியர் பரீக்ஷித்தால், நாடி நிலை எளிதில் புலப்படும். விருந்து சாப்பிட்டவுடனே நாடியின் ஓட்டத்தை நிர்ணயிக்கத் தாமதப்படும். விருந்தும் உபவாசமும் மனிதனுக்கு நன்மைதரக் கூடியவையே. உணவு ஜீரணமானதும் பசி உண்டாகிறது. உபவாசம் இருந்த பிறகு ஸ்தூல, ஆத்மீய பலன்கள் அனந்தம். ஏகாக்கிரத்துடன் இறைவனைச் சிந்திக்கிறான் உபவாசமிருக்கிறவன். அவனிடத்தில் அமைதியையும் ஸாந்தியையும் காணலாம். குறிப்பிட்ட காலங்களில் தொடர்ந்து 24 மணி நேரம் உபவாசம் இருப்பதால் ஆத்மீய சக்திகள் உபவாசிக்கு வந்து அமைகின்றன. அவனை ஓர் கூட்டம் சூழ்ந்துகொண்டு அவனுடைய உபதேசங்களைப் பெற்றுச் சாதிக்கத் தயாராகிறது. உங்கள் முன்னிலையில் இத்தகைய உபவாசி இருக்க வேண்டுமென்கிற ஆர்வம் எழுகிறது. எக்காரணம் பற்றியோ உபவாசியிடம் பயபக்தி உண்டாகிறது.

RangaRakes tamilnavarasam.com

அவனையறியாமலேயே இறைவனின் திருவருள் அவனிடம் குடிகொண்டுவிட்டது. அந்தத் திருவருளின் ஓர் திவலைதான் மக்களை இழுக்கிறது—ஆகர்ஷிக்கிறது. ஏகாதசி விரதமோ, சனிக்கிழமை விரதமோ அல்லது சோமவார விரதமோ ஒருவன் முறையாக 24 மணி நேரம் அனுஷ்டிப்பானானால், அவனிடம் தெய்வ சாந்நித்யம் பரிபூரணமாக விளங்கும். அவனுடைய வாழ்க்கை ஆன்மீய நெறியை விட்டு அணுவளவும் பிசகாது. 24 மணி நேரம் உபவாசம் இருப்பதால், குடலுக்கு ஓய்வு; மூளை வேலை செய்யத் தடை இல்லை. இதர நாட்களில் செலுத்தும் பக்தியைக் காட்டிலும் உபவாச தினத்தில் அதிக மணி நேரம் பக்தியைச் செலுத்த முடிகிறது. உடல் வளம் பெறுகிறது. உயிர்க்கும் வலிமை ஏற்படுகிறது. நீங்கள் 24 மணி நேர உபவாசங்களைத் தொடர்ந்து அனுஷ்டித்து, இறைவனின் திருவருளைப் பெறுவீர்களாக.

— ஓம் தத் ஸத். —

## தசரா அல்லது நவராத்திரி பூஜை

மஹிஷாசுரனை வதைத்த துர்க்காதேவியின் பொருட்டு நடத்தப்படும் பூஜை

தசரா இந்துக்கள் கொண்டாடும் விழாக்களில் பெரிய விழா. கடவுளை மாதாவாகப் பாவித்துப் பூஜை செய்யும் விழா இது.

விஜயதசமியன்று பழங்காலத்தில் அரசர்கள் விஜய யாத்திரையை மேற்கொண்டார்கள். இது மேற்



கொள்ளாத மன்னர்கள் ஆழ்ந்த கானகங்களில் நுழைந்து வேட்டையாடுவது வழக்கம். இராஜபுதனத்தில் இன்று பரியந்தம், மக்கள் ஏதாவது ஒரு கோட்டையைக் கேலியாகத் தாக்கிப் பழம் வீர தீரத்தை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

இந்த நன்னாளில்தான் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி இராவணனை சம்ஹரித்து உலக மக்களை அவனுடைய கொடுமையினின்று காப்பாற்றினார். தர்மம் ஸ்தாபிக்கப்பட்டு எங்கும் சுபிட்சமும் ஸாந்தியும் நிலவின.

தசரா அன்றுதினந்தான் பாண்டவர்கள் அஞ்ஞானவாசத்தை முடித்துக்கொண்டு சாமி விருக்ஷத்தில் மறைத்துவைத்திருந்த தங்கள் ஆயுதங்களை எடுத்துக்கொண்டார்கள்.

ஸ்ரீ ராமபிரானுடைய வாழ்க்கைக்கும் இந்த விழாவுக்கும் தொடர்பு உண்டு. உத்தம மனிதன், மகன், அண்ணன், கணவன், பிதா அல்லது அரசன் என்ற முறைகளில் ஸ்ரீ ராமருக்கு ஈடு உலக சரித்திரத்தில் வேறே எங்கேயும் காணப்படவில்லை ஸ்ரீ ராமபிரானுடைய மஹத்துவத்தை ஸ்ரீ வால்மீகி மஹரிஷி வர்ணித்ததில் வடமொழி முழுவதையும் பிரயோகித்து விட்டார். நாமெல்லோரும் நற்குண நல்லொழுக்கமுள்ளவர்களாய்த் திருந்திக்கொள்ளத் தீர்மானிப்போமாக. தீர்மானித்துச் செயலாற்றுவோமாக. ஸ்ரீ ராமருடைய உபதேசங்களில் நூற்றில் ஒரு பங்கு உபதேசமாவது அனுஷ்டிப்போமானால், ரோஜா புஷ்பத்தைக் காட்டிலும் மேலான நறுமணமும் பொன்னைக் காட்டிலும் அதிக பிரகாசமும் வாய்ந்ததாக நமது வாழ்க்கையை மற்றியமைத்துக் கொள்வோமாக.

RangaRakes
tamilnavarasam.com

தசரா என்பதை தச—ஹரா என்று பிரிக்கலாம். தசம் என்பது பத்து. ஹரா என்பது சம்ஹரித்தல் ஆகும். ஸ்ரீ ராமர் ராவணனுடைய பத்துத் தலைகளையும் வெட்டிச் சம்ஹாரம் பண்ணினார். நம்மிடத்தில் உள்ள அகங்காரம் எனும் பிசாசினுடைய பத்துத் தலைகளையும் வெட்டி வீழ்த்தித் தசரா கொண்டாட்டங்கள் நியாயமென்று நிலைநாட்டுவோமாக. அந்தப் பத்துத் தலைகளாவன :— தீய உணர்ச்சி, கர்வம், கோபம், பேராசை, சித்தப்பிரமை, காமம், பகைமை, பொறுமை, சுயநலம், வஞ்சனை.

தெய்வீக மாதாவுக்கு ஜே! தேவி ஆத்மீய ஏணியின் உச்சிக்கு உங்களைப் படிப்படியாக இட்டுக் கொண்டு பகவானோடு ஐக்கியப் படுத்துவாராக.

— ஓம் தத் ஸத். —

## மகர சங்கராந்தி.

தை மாதம் முதல் ஆனி மீ" முடிய உத்தராயணம் என்று பெயர். சூரியநாராயணமூர்த்தி மகரராசியில் பிரவேசித்து உத்திராயணப் பிரயாணத்தைத் தொடங்கின நன்னாள் தை மீ" 1உ மகர சங்கராந்தி ஆகும். இப் புனித நாள் ஒரு புண்ணிய நாள். கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் சங்கமமாகிற திரிவேணியில் (அலகாபாத்) இந்த நாளில் நீராடினால், மஹா விசேஷமானதெனக் கூறப்படுகிறது. "மகமேலா" என்ற பிரசித்திபெற்ற திருவிழா அங்கே நடைபெறுகிறது

தென்னிந்தியாவில் இந்த நாள் பொங்கல் பண்டிகை. அறுவடை செய்த புது நெல் குத்தி, சூரிய



நாராயணமூர்த்திக்குப் பொங்கல் நைவேத்தியம் படைப்பார்கள். கரும்பு மஞ்சள் முதலியவை மங்களகரமான அம்சங்களை ஞாபகப் படுத்துகின்றன. குடும்பஸ்தர்கள் அதிகாலையில் சூரியநாராயணமூர்த்தி உதயத்துக்குமுன் எழுந்து, நீராடி, புத்தாடை புனைந்து, முக மலர்ச்சியோடு கதிரவ பகவானை அதிபக்தி சிரத்தையோடு கைதூக்கி வணங்கி பூஜை செய்தல்வேண்டும். ஞானிகள் ஆத்மீகப் பயிற்சிகளில் வெகுநேரம் ஈடுபடலாம். ஏழைகளுக்குத் தான தருமங்கள் செய்யப்படவேண்டும். இத்தினத்திற்கு மறுநாள் "மாட்டுப் பொங்கல்" ஆகும். சுயநலம் கருதாது மக்களுக்குப் பால் வழங்குதல் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்ட பசுக்களை காமதேனுக்களாகப் பாவிக்க வேண்டும். "கோ பூஜை" மஹேஸ்வர பூஜைக்குச் சமமானது. ஆடு மாடுகளுக்குப் பூமாலைகள் சூட்டிப் பழம், பொங்கல் கொடுத்து அவற்றை ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள்.

மாணவனுக்குக் குருவின் கிருபை இறங்குவதற்குக் குருதேவரால் குறிப்பிடப்பட்ட பருவகால புண்ணிய நாள் மகர சங்கராந்தியே. நாமெல்லோரும் சூரிய நாராயணமூர்த்தியை வணங்கித் திருவருளும் இகபர சௌபாக்கியங்களும் பெற்று உய்வோமாக.

## யம த்விதீயா விரதம்

புனித தினமோ, திருவிழாவோ ஒவ்வொன்றும் மனிதனுடைய உள்ளத்தில் குறிப்பிட்ட அதிர்வுச் சக்தியை உண்டுபண்ணுகிறது. எல்லாப் புனித நாட்களிலும், ஏதாவது ஒரு கிரகம் அனுகூலமாயிருக்கிறது. சக்தியும் நன்மையும் தரவல்ல சாத்வீக ஆத்மீய அலைகளை அது உள்ளத்தில் உற்பத்தி பண்ணுகிறது. மனிதன் அறிந்தோ அறியாமலோ இந்த ஆன்மீய சக்தியைப் அடையப்பெறுகிறான். இத்தகைய புனித நாட்களிலே, ஒவ்வொருவரும் சந்தோஷம், உற்சாகம்,

RangaRakes

tamilnavarasam.com

குதூகலம் ஆகியவற்றினால் முகமலர்ந்து காணப்படுகின்றனர்.

வைசியர்களால் கொண்டாடப்படும் இந்த யம த்விதீயா அல்லது சித்ரகுப்த யம த்விதீயா என்னும் நன்னாள் கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷத்துத் துவிதியை திதியில் வருகிறது. இது யமதர்ம ராஜாவுக்கு உகந்த புண்ணிய தினம்.

மரணதேவர் எனச் சொல்லப்படுகிற யமதேவரை இந்நாளிலே யமுனாநதி தேவி வழிபட்டு வந்தாள். யமதர்மராஜாவை அவள் தனது சகோதரனாகப் பாவித்தாள். தர்மராஜாவுக்குப் பரம சந்தோஷம் மேலிட்டது. யாராவது இந்த நாளில் யமுனா நதியில் நீராடினால் அவன் மோக்ஷத்துக்குப் போவான் என்று யமதர்மராஜாவே முழங்கினார். யமுனாதேவி யமனை வழிபட்ட மதுரா பட்டிணத்தில் (Muttra) மேளாக்கள் நடைபெறுகின்றன. பல்லாயிரம் மக்கள் இங்கே வந்து நீராடி யமதர்ம ராஜாவின் திருவருளைப் பெறுகிறார்கள். அன்று மக்கள் உபவாசம் அனுஷ்டிக்கிறார்கள். இந்த நன்னாளில் சகோதரிகள் தம் சகோதரர்களை வழிபட்டு விருந்தளிப்பார்கள். இதனால் சிறந்த ஆரோக்கியமும் நிறைந்த செல்வமும் பெறுவார்கள். சர்வ வியாபகமான சகோதரத்துவத்தையும் சகோதரித்துவத்தையும் வளர்க்க வேண்டுமென்று நினைவுறுத்தும் ஞாபகார்த்த தினம் இது. ஆத்மாவின் ஏகத்துவம் பெறுதற்கு இது இறுதியில் வழி செய்கிறது. யமுனைக்கு யமனை எம்முறையோ அம்முறையிலே சகோதரி தன் சகோதரனை வழிபடவேண்டும். அப்பால் அவனை யம பயமோ, மரண பயமோ அண்டுவதில்லை.

பிரபஞ்சத்தைச் சிருஷ்டி பண்ணியதும், பிரஹ்மதேவர் தமது ஜேஷ்ட குமாரர் ஸ்வாயம்புவரை அழைத்து இப் பிரபஞ்சத்தை ஆட்சி செய்துவருமாறு ஆக்ஞாபித்தார். பின், நாராயண மூர்த்தியின்மீது அவர் தமது சித்தத்தைப் பதித்து, ஏகாக்ரம் அடைந்து, சமாதிநிலை பெற்றுவிட்டார். அவர் ஆயிரம் ஆண்டு கோர தபம் புரிந்தார். பிரஹ்மதேவரின் பிரஹ்மானந்தமான



நிலையிலிருந்து கலைய ஏதோ காரணம் இருந்தது. பிரஹ்மா கண் திறந்து, அவர் முன்னால் தெய்வீகப் பண்பாட்டுருவம் ஒன்றைத் தரிசித்தார். "நீர் யார்?" என்று கேட்டார். தெய்வீகப் பண்பாட்டுருவம், "நான் தங்கள் தேகத்திலிருந்து வெளிப்பட்டவன். எனக்குப் பொருத்தமான பெயரைத் தாங்கள் தாருங்கள்" என்று வேண்டிற்று. பிரஹ்மா அவ்வுருவத்திற்கு சித்ரகுப்தன் என்னும் பெயரைச் சூட்டினார். யமதர்மபுரிக்குத் தலைநகரமாகிய சமயாமினியில் ஓர் நீதிபதியாக சித்ரகுப்தரை நியமித்தார். சித்ரகுப்தருக்குப் பல புத்திரர்கள் தோன்றினார்கள். அவர்களுக்குத் தேவையான ஆத்மீயக் கல்வியைப் போதித்து; யாகமும் தவமும் செய்ய வேண்டுமென்று உபதேசித்தார். அதிதிகளையும் பிராஹ்மணர்களையும் வழிபட்டு அவர்களுக்குத் தொண்டு ஆற்றுவதால் புனிதமான வாழ்க்கையை நடாத்தியவர்களாவார்கள் என்ற பாடமும் புகட்டப்பட்டது.

காயஸ்தர்கள் அதாவது வைசியர்கள் எல்லோரும் இப்புனித நாளில் ஒன்றுகூடி, தங்கள் தெய்வமாகிய சித்திரகுப்தரை வழிபடுவார்கள். யமதர்மராஜரை வழிபடுவதால், ஒரு முமூக்ஷு மரண பயத்தினின்றும் விடுபடுகிறான். அவன் மோக்ஷம் அடைகிறான். மேலான ஆனந்தத்தை அனுபவிக்கிறான். அவனுடைய எல்லா ஆசைகளும் நிறைவேறுகின்றன. சித்திரகுப்தர் தம் புத்திரர்களிடத்திலும் பேரர்களிடத்திலும் கொண்டுள்ள கடமைகளைப் போல, ஒருவன் எப்போதும் தனது கடமைகளை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும், மறக்கலாகாது.

இந்த "யம த்விதீயா" புனித நாளைப் பக்தி சிரத்தையுடன் நீங்கள் எல்லோரும் கொண்டாடுவீர்களாக! தூய மார்க்கத்தில் ஒழுகி, இறுதி இலட்சியமாகிய நித்தியானந்தத்தைப் பெறுவீர்களாக! யமதர்மப் பிரபு உங்கள் அனைவரையும் மரண பயத்திலிருந்து விடுவித்து, ஆத்ம சாக்ஷாத்கார நெறியில் செலுத்துவாராக.

ஓம் தத் ஸத்.

RangaRakes tamilnavarasam.com